# வருவன எதிர்நோக்கும் வள்ளுவர் பார்வை

## டாக்டர் வா.செ. குழந்தைசாமி

வள்ளுவர் தம் குறளில் நம்மைக் கவரும் கூறுபாடு, கருதும் தோறும் நம்மை அதிசயிக்கவைக்கும் கூறுபாடு, அவரது அணுகுமுறையில், பார்வையில் நாம் காணும் அசாதாரணத் தொலை நோக்கு ஆகும். அவருடைய கருத்துகள் பல காலத்தை ஊடுருவி, எதிர்கால வளர்ச்சியை எதிர்பார்ப்பனவாக அமைந்துள்ளமை நம்மை உண்மையிலேயே வியப்பில் ஆழ்த்துகிறது. கல்வி பற்றிய வள்ளுவருடைய கருத்துகள் அவர் வாழ்ந்த கால வரம்புகளைப் பெரிதும் மிஞ்சி நிற்கின்றன. கல்வியில் அன்றைய சமுதாயம் காணாத பல வாய்ப்புகள், பல சாத்தியக் கூறுகளை வள்ளுவர் எண்ணியிருக்கிறார் என்பதற்கான, அல்லது எண்ணுவதற்கு இடமளிக்கும் வகையில் அவரது கூற்று அமைந்திருக்கிறது என்பதற்கான அகச்சான்றுகள் நிறைய இருக்கின்றன. உதாரணத்திற்கு இங்கு ஒரு குறளைப் பார்ப்போம்.

*ஊரென்னும் மாந்திரையர் அல்லால் பயவாக்*
*களரனையர் கல்லாதவர்*

புரிந்து கொள்வதற்கு எளிய குறள். இதன் பொருள் பின் வருமாறு :

**கல்லாதவர்கள், ஒப்புக்கு அவர்களும் இருக்கிறார்கள் என்பதன்றி அவர்கள் களர்நிலம் போன்றவர்கள். அவர்களால் சமுதாயத்திற்குப் பயன் எதுவும் இல்லை.**

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் கல்வி ஒரு பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை. அன்றைய சமுதாயம் உணவுக்கு, உடைக்கு, உறையும் குடியிருப்பிற்கு உடலுழைப்பாளர்களையே நம்பி இருந்தது. அன்றைய பொருளாதாரம் எழுத்தறிவு பெற்றவர்களின் அடிப்படையில் அமையவில்லை. தச்சரும், கொல்லரும், குயவரும், விவசாயிகளும் பயிற்சியின் அடிப்படையில் தொழில் செய்தவர்களே அன்றி, படிப்பின் அடிப்படையில் தொழில் செய்தவர்கள் அல்லர். இந்த நிலைமை பெரிய மாற்றங்களின்றி தொழில்யுகம் தோன்றும்வரை தொடர்ந்தது. தொழில் நாகரிகம் என்பது அறிவியல், தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்தது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் ஒரு தற்குறிச் சமுதாயம் பயன்படுத்த முடியாது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தக் கல்வி தேவை.

நாம் இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருக்கிறோம். இன்று நாம் காணும் சூழ்நிலை என்ன? அறிவியலும் தொழில் நுட்பமும் தவிர்க்க இயலாது. ஒரு வளர்ச்சிக் கருவியாக மலர்ந்து விட்டன. அவை இடம்பெறாத துறைகளே இல்லை.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் காற்றுப்போல வியாபித்து நிற்கின்றன. இன்று ஒரு நாட்டின் பொருளாதார நிலை அது எந்த அளவிற்கு அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் ஆழ்ந்து ஏற்கவும் அவற்றைப் பயன்படுத்தவும் புதியன படைக்கவும் இயலும் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தும் திறன் ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது.

கல்வியின் பங்கில் இன்று ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். பண்டைய நாளில் செல்வம் பெற்ற நாடு தான் அதன் மக்கட்குக் கல்வி அளிக்க இயலும் என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று கல்வி பெற்ற நாடுதான் செல்வம் பெற இயலும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

சென்ற நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் பெரும்பகுதி, 100க்கு 80 சதவிகிதத்திற்கு மேல் எழுத்தறிவு பெற்றிருந்த நாடுகட்கே போய்விட்டது. இதில் அண்மையில் மேலும் ஒரு மாற்றம் தோன்றியிருக்கிறது. முன்பு பரந்த அளவில் மக்கள் கல்வி என்று பார்க்கும்பொழுது ஆரம்பக்கல்வி பெற்றவர்கள் சதவிகிதம் கணிசமாக இருந்தால், அந்தச் சமுதாயம் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியைத் தனது பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள இயலும் என்ற நிலை இருந்தது. அண்மையில் ஐக்கிய நாடுகள் அய்வு நிறுவனத்தின் தொடர்புடன் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து, ஆரம்பக் கல்வி போதுமானதாக இல்லை; உயர் பள்ளிக் கல்வி (Secondary Grade Education) இன்று குறைந்தபட்சத் தேவையாக இருக்கிறது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

மேலே கூறப்பட்ட கருத்துகளில் சுருக்கம், விபரம் என்ன என்பது தெளிவாகிறது. இன்றைய சமுதாயத்தில் கல்வியில்லாத மக்கள் பொருளாதாரத் தேவைகட்கு பயனில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள். வள்ளுவர் மொழியில் கூறுவதானால் அவர்கள் ''களர் அனையர்'', **களர் நிலம் விளைச்சல் எதுவும் தராது. அதுவும் உலகில் ஒரு பகுதியாக இருக்கின்றது என்பதற்கு மேல் அதனால் பயன் இல்லை. அது போன்றவர்கள் கல்வி அறிவு இல்லாத மக்கள். அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு மேல் அவர்களால் சமுதாயத்திற்குப் பயன் இல்லை.** இன்று அது உண்மை. வள்ளுவர் காலத்தில் கல்வி அப்படிப்பட்ட பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை. இருந்தும் வள்ளுவர் அன்றே ''கல்வியில்லாதவர்கள் களரனையர்'' என்று கூறியிருப்பது, அவரது பார்வை காலத்தை ஊடுருவிக் காணும் சிறப்புடையது என்பதற்குச் சான்று பகருகிறது.

கல்வி ஓர் அணிகலனாக, அலங்காரப் பொருளாக பண்பாட்டுத் தேவையாக, பொருளாதார முக்கியத்துவம் இல்லாத ஒன்றாக இருந்த காலத்தில் வாழ்ந்த வள்ளுவர் அதன் தேவையை வற்புறுத்துவதில் இவ்வளவு தொலைநோக்குள்ள விரிவுரைக்கு இடம் கொடுக்கும். உவமையைக் கையாண்டிருப்பது எண்ணந்தொறும் நம்மை ஆழ்ந்த வியப்பில் அதனினும் மேலாக ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுத்துகிறது. இப்படிப்பட்ட அசாதாரணப் பார்வையைக் காரணகாரியத்தோடு விளக்க இயலாத நிலையில் அவரைத் ''தெய்வப் புலவர்'' என்கிறோம்.